1970 ஏப்ரல் 2]

இதைப் பல்கலைக் கழகம் தான் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும். சில தனியார் பள்ளிகளில் பரிட்சை இல்லாமலே சேர்த்துக்கொள்கிறார்கள். சில பள்ளிகளில் மட்டும்தான் பரிட்சை எழுத வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டால் திறமையான மாணவர்களைத்தான் நாங்கள் சேர்த்துக்கொள்வோம், தரமான மாணவர்களை உருவாக்க வேண்டுமென்றால் இப்படி தேர்வு வைத்து எடுத்தால்தான் மாணவர்களின் தகுதி, திறமையை அதிகரிக்க முடியும் என்று சொல்கிறார்கள். சில தனியார் பள்ளிகளில் பரீட்சை இல்லாமல் சேர்க்கிறார்கள். சிபாரிசின்பேரிலும் சேர்த்துக்கொள்கிறார்கள். எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரசாங்கப் பள்ளிகளில் நாம் பரீட்சை இல்லாமலே சேர்த்துக்கொள்கிறோம். இதனால் ஏழை எளியவர்கள் எல்லோரும் கல்வி கற்க வழி ஏற்படும் என்ற கருத்தில்தான் இப்படிச் செய்திருக்கிறோம். சென்னை போன்ற நகரங்களில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணமாகத்தான் மாநகராட்சி மூலமாக சில உயர்நிலைப்பள்ளிகளைத் துவக்கியிருக்கிறோம். இதனால் ஏழை எளிய மாணவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதுதான் அரசினுடைய கருத்து. தனியார் பள்ளிகளில் சிலவற்றில்தான் தேர்வு முறை இருக்கிறது. ஒரு மாணவன் எட்டாவது வகுப்பு படித்தான் என்றால், பரிட்சை எழுதிவிட்டு சேரட்டுமே, இப்படிச் செய்யாவிட்டால் திறமையற்றவர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டி வருமே, தரம் குறைந்துவிடுமே என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை, சட்டப்படி நாம் தடுத்து நிறுத்த முடியாது. ஆகவேதான் ஆங்காங்கே ஏழை எளிய மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடக் கூடாதே என்பதற்காக அரசினர் பள்ளிகளைத் துவக்கியிருக்கிறோம்.

திருவையாற்றில் உள்ள தமிழ்க்கல்லூரி விடுதி.

* 643 வினு.—திரு. வை சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவையாற்றில் உள்ள தமிழ்க்கல்லூரி உணவு விடுதியை மூடிவிட அரசு உத்தேசித்துள்ளதின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உணவு விடுதியை மூடிவிட உத்தேசமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்த உணவு விடுதியை மீண்டும் திறக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கு ஒரு கிளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக உண்ணாவிரதம் போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டதன் காரணமாக கல்லூரியின்

விடுதி மூடப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு கல்லூரி திறக்கப் படும்போது, விடுதியும் திறக்கப்பட்டு நடைமுறைக்கு வரும். தற்காலிகமாகத்தான் மூடப்பட்டிருக்கிறது.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, சமீபத்திலே, அந்தக் கல்லூரியின் முதல்வரை, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சஸ்பென்ட் செய்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அதன் விவரங்களை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் கல்லூரி முதல்வர் மீது பல குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் தான் நிர்வாகம் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் டி. ஆர். ஓ.வை அனுப்பி விசாரணை செய்தார்கள். மாணவர்கள் கல்லூரி முதல்வரை நீக்க வேண்டுமென்று, கிளர்ச்சி, உண்ணாவிரதம் போன்றவைகளை நடத்தினார்கள். இதன் காரணமாக முதல்வரை விடுமுறையில் போகச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார். மறுபடியும் மாணவர்கள் முதல்வரை நீக்கினாலொழிய கிளர்ச்சி நிற்காது, முதல்வரை நீக்க வேண்டும் என்று சொன்னார்கள். மீண்டும் டி. ஆர். ஓ. அங்கு போய் விசாரித்து, கல்லூரி முதல்வர்மீது இரண்டு குற்றச்சாட்டு கள் இருக்கின்றன என்று அறிவித்தார். அதாவது ஒன்று முதல்வர் பெண்களிடத்தில் சரியாக நடந்து கொள்ளவில்லை. இரண்டாவதாக, கேள்வித்தாள்களில் அவர் தவறு இழைத்திருக் கிறார் என்று சொல்லப்பட்டு அதற்காக அவர் சஸ்பென்ட் செய்யப் பட்டிருக்கிறார். அதன்மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கப் படும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பிறகு மாணவர்கள் எல்லாம் சேர்ந்து, பரீட்சை இல்லாமலே அடுத்த ஆண்டு மேல் வகுப்புக்கு அனுப்ப வேண்டுமென்று கூறி, வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆகவே, கல்லூரி மூடப்பட்டு, கல்லூரி திறந்த பிறகு பரீட்சை உண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சட்டக் கல்லூரி

***644 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக் கல்லூரியில் மறைந்த மாநில முதல்வர் திரு. அண்ணாதுரை அவர்களின் சிலையைத் திறப்பதற்கு மறுப்புத் தெரிவித்து பெரும்பாலான மாணவர்களிடமிருந்து அரசுக்கு குறிப்பு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, மாணவர் சங்கத் தலைவர் இந்தச் சிலை திறப்பது கூடாது என்று பதவியை